**<u>நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வாணியம்பாடி, திருப்பத்தூர் மாவட்டம்</u>**

**<u>முன்னிலை</u> : திருமதி. கா. ஸ்ரீபதி, B.A., L.L.B.,**

நீதித்துறை நடுவர், வாணியம்பாடி.

2026ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 01 ஆம் நாள் புதன்கிழமை

**<u>ஆண்டுப்பட்டிகை வழக்கு எண் 673/2025</u>**

<u>CNR NO.TNTU09-007254-2025</u>

| வரிசை எண். | விளக்கம் | விவரங்கள் |
|---|---|---|
| 1. | குற்றமுறையிடுபவர் | அரசுக்காக காவல் சிறப்பு உதவி ஆய்வாளர், வாணியம்பாடி மதுவிலக்கு அமலாக்க பிரிவு. குற்ற எண். 149/2025 |
| 2. | எதிரிகள் | முனிசாமி த/பெ. கோபால் |
| 3. | குற்றம் | சட்டப்பிரிவுகள் 4(1) (C), 4(1) (A) TNP (Amendment) Act |
| 4. | சம்பவம் நடந்த தேதி | 12.08.2025 |
| 5. | முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்ட நாள். | 12.08.2025 |
| 6. | எதிரிகள் கைது செய்யப்பட்ட நாள் மற்றும் பிணையில் சென்ற விபரம் மற்றும் நாள் | 12.08.2025 – 12.08.2025 |
| 7. | குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்ட நாள் | 04.11.2025 |
| 8. | BNSS பிரிவு 264–ன் கீழ் குற்றம் குறித்து வினவப்பட்ட நாள் | 27.01.2026 |
| 9. | BNSS பிரிவு 355–ன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட மனுக்களை தவிர மற்ற மனுக்கள் தாக்கல் செய்யபட்ட விவரம் அதன் முடிவுகள். | – |
| 10 | வழக்கின் சாட்சிகள் முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை செய்யப்பட்ட நாள் | அ.சா.1 – அ.சா.3 – 25.03.2026 |
| 11 | எதிரிகளிடம் குற்றம் குறித்து BNSS பிரிவு 351(1)(b)–ன் கீழ் வினவிய நாள் | 27.03.2026 |

| | | |
|---|---|---|
| 12 | எதிரிகள் மீது பிடியாணை வழுங்கப்பட்ட நாள் மற்றும் திரும்ப பெறப்பட்ட நாள் | – |
| 13 | தீர்ப்பு பகரப்பட்ட நாள் | 01.04.2026 |
| 14 | தீர்வு | BNSS பிரிவு 271 (1) கீழ் விடுதலை. |

**<u>நீதித்துறை படிவம் எண்: 61</u>**

புகார்தாரர் : அரசுக்காக காவல் சிறப்பு உதவி ஆய்வாளர்,
வாணியம்பாடி மதுவிலக்கு அமலாக்க பிரிவு.

எதிரி : முனிசாமி த/பெ. கோபால்

குற்றம் : சட்டப்பிரிவுகள் 4(1) (C), 4(1) (A) TNP (Amendment) Act

முடிவு : இறுதியாக அரசு தரப்பில் எதிரிக்கு எதிரான குற்றச்சாட்டுகள் ஆனது சந்தேகத்திற்கு இடம் இன்றி நிரூபிக்கப்படாததால் சந்தேகத்தின் பலன்களை எதிரிக்கு அளித்து எதிரியை இவ்வழக்கில் இருந்து விடுதலை செய்வது நீதியின் நலனுக்கு உகந்தது என்று இந்த நீதிமன்றம் தீர்மானித்து எதிரியை வழக்கிலிருந்து BNSS பிரிவு 271 (1) கீழ் விடுதலை செய்து உத்தரவிட்டு தீர்ப்பளிக்கப்படுகிறது.

| வ. எண் | எதிரி பெயர் | தந்தை / கணவர் பெயர் | சாதி (அ) இனம் | தொழில் | முகவரி | வயது |
|---|---|---|---|---|---|---|
| 1. | முனிசாமி | கோபால் | இந்து | கூலி | VOC தெரு, வாணியம்பாடி. | 52 |

| தேதி | | | | | | | தாமதம் (ம) அதன் விளக்கம் |
|---|---|---|---|---|---|---|---|
| குற்றம் | புகார் அறிக் கை | கைது செய்யப்பட்ட நாள் | பிணையில் சென்ற நாள் | விசாரணை யின் தொடக்கம் | விசார ணையின் முடிவு | உத்தரவு | |
| 12.08.25 | 12.08.25 | 12.08.25 | 12.08.25 | 27.01.26 | 27.03.26 | 01.04.26 | – |

இவ்வழக்கானது 08.12.2025 அன்று இந்நீதிமன்ற கோப்பில் எடுக்கப்பட்டு 27.03.2026–ம் தேதியன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது குற்றமுறையிடுபவர் தரப்பில் கற்றறிந்த அரசு குற்றதுறை உதவி வழக்கறிஞர்

நிலை 1 திருமதி.மகேஸ்வரி அவர்கள் ஆஜராகியும் எதிரிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.M.குமரன், B.A., BL., அவர்கள் ஆஜராகியும் இது நாள் வரை விசாரணை செய்தும் வழக்கின் சாட்சிகளின் சாட்சியங்கள் மற்றும் ஆவணங்களை பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் இவ்வழக்கில் வழங்கிடும்

**<u>தீர்ப்புரை</u>**

**<u>1. குற்ற இறுதி அறிக்கையின் சுருக்கம்:</u>**

இவ்வழக்கில் வாணியம்பாடி மது விலக்கு அமலாக்க பிரிவு காவல் நிலைய சரகத்திற்குட்பட்ட தும்பேரி அடுத்த அண்ணா நகர் சோதனை சாவடியிடம் கடந்த 12.08.2025ம் தேதி 14.45 மணிக்கு எதிரி முனுசாமி என்பவர் தமிழக அரசு மதுபானம் சுமார் 180 ML அளவு கொண்ட Express Brandy – 11, Black Pearl Brandy – 3, Old Chef Strong XXX Rum – 5, Diamond XXX Rum – 1 என மொத்தம் 20 பாட்டில்களை அரசு மதுபானக் கடையிலிருந்து வாங்கி வந்து அவற்றை லாப நோக்கோடு அதிக விலைக்கு சில்லறையில் விற்பனை செய்ய எடுத்து வந்துள்ளார். எனவே, எதிரியின் மீது சட்டப்பிரிவுகள் 4(1) (C), 4(1) (A) TNP (Amendment) Act–ன்கீழ் தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்ததாக வாணியம்பாடி மதுவிலக்கு அமலாக்க பிரிவு காவல் நிலைய காவல் உதவி ஆய்வாளர் எதிரியின் மீது இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2. எதிரி மீது முகாந்திர வழக்கு இருப்பதால் இவ்வழக்கானது இந்நீதிமன்றத்தால் சட்டப்பிரிவுகள் 4(1) (C), 4(1) (A) TNP (Amendment) Act – ன் கீழ் கோப்பிற்கு எடுக்கப்பட்டு, எதிரிக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டது. இந்த வழக்கில் எதிரி ஆஜரானதும் வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட ஆவணத்தின் நகல்கள் அனைத்தும் எதிரிக்கு BNSS பிரிவு 230 ன்படி இலவசமாக வழங்கப்பட்டது.

3. குற்றம்சாட்டப்பட்ட நபருக்கு போதிய கால அவகாசம் கொடுத்து, பின்னிட்டு இருதரப்பு வாதமும் கேட்டு, ஆவணங்களை பரிசீலித்தும் எதிரி மீதான குற்ற செயல்களை விசாரிக்க போதுமான முகாந்திரம் இருந்த காரணத்தினால், எதிரி மீது

சட்டப்பிரிவுகள் 4(1) (C), 4(1) (A) TNP (Amendment) Act – ன் கீழான குற்றத்தின் சாராம்சத்தை விளக்கி கூற வினவியபோது, எதிரி குற்றத்தை மறுத்துரைத்ததால் அரசு தரப்பு சாட்சிகள் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

4. அரசு தரப்பில் **அ.சா.1 முதல் அ.சா.3** வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டுள்ளனர். **அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.3** வரையிலான சான்றாவணங்கள் மற்றும் **சான்றுபொருள் சா.பொ.1** ஆகியவை குறியீடு செய்யப்பட்டுள்ளன.

**5. அரசு தரப்பு சாட்சியங்களின் மூலம் தெரியவரும் அரசுதரப்பு வழக்கின் சுருக்கம் :**

5 (i) இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரியான அ.சா.3 திரு. பிரபாவதி சிறப்பு உதவி ஆய்வாளர் கடந்த 12.08.2025ம் தேதி மதியம் 02.00 மணிக்கு அ.சா.1 மற்றும் அ.சா.2வுடன் அண்ணா நகர் சோதனை சாவடியிடம் மது விலக்கு சம்பந்தமாக கண்காணித்துக்கொண்டு சென்றபோது, சந்தேகப்படும்படி ஒரு நபர் பேக் வைத்துக்கொண்டு உட்கார்ந்திருந்தவரை சோதனை செய்த போது சா.பொ.1 Express Brandy – 11, Black Bar – 3, Old Chief – 5, Diamond Rum – 1 என மொத்தம் 20 பாட்டில்கள் இருந்ததை அ.சா.1 மற்றும் அ.சா.2ன் முன்னிலையில் அ.சா.ஆ.1 கைப்பற்றுதல் மகஜர் மூலம் பாட்டில்களை கைப்பற்றியுள்ளார். பின்னர், கைப்பற்றப்பட்ட வழக்கு சொத்துக்களை அ.சா.ஆ.3 படிவம் 91ன் மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பியுள்ளார். பின்பு எதிரியை காரணம் கூறி கைது செய்து நிலையம் கொண்டு வந்து குற்ற எண் 149/2025 பிரிவுகள் சட்டப்பிரிவுகள் 4(1) (C), 4(1) (A) TNP (Amendment) Act கீழ் அ.சா.ஆ.3 முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து எதிரியை நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியுள்ளார். பின்னர் தலைமை காவலர் அ.சா.1 திரு. பாக்கியநாதன் மற்றும் தலைமை காவலர் அ.சா.2 திரு. தினேஷ் ஆகியோர்களையும் விசாரித்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்னர். வழக்கின் புலன் விசாரணை முடித்து எதிரி மீதான குற்றம் உண்மையென தெரிய வந்ததால் இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

6. அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் சாட்சியங்களில் இருந்தும் மற்றும் சான்றாவணங்களில் இருந்தும் குற்றம் சாட்டப்பட்ட நபருக்கு பாதகமாக அமைந்ததை சாட்சிய சூழ்நிலைகளை எதிரியிடம் குவிமுச பிரிவு 313(i)(ஆ)–ன் கீழ் வினவியபோது எதிரி மேற்படி சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் பொய் என்று கூறினார். மேலும் எதிரி தரப்பில் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை மற்றும் சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

**<u>இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில் அரசு தரப்பில், எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் சம்பவத்தை தகுநிலை ஐயத்திற்கு இடமின்றி நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா என்பதேயாகும்</u>**

7. அரசு தரப்பில் எதிரியானவர் தும்பேரி அடுத்த அண்ணா நகர் சோதனை சாவடியிடம் Express Brandy – 11, Black Pearl Brandy – 3, Old Chef Strong XXX Rum – 5, Diamond XXX Rum – 1 என மொத்தம் 20 பாட்டில்களை அரசு மதுபானக்கடையிலிருந்து வாங்கி வந்து அவற்றை லாப நோக்கோடு அதிக விலைக்கு சில்லறையில் விற்பனை செய்ய வைத்து இருந்ததாக அரசு தரப்பில் எதிரி மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

8. வழக்கின் கைப்பற்றுதல் மகஜர் சாட்சியான தலைமை காவலர் திரு. பாக்கியநாதன் அரசுதரப்பில் அ.சா.1 ஆகவும், மற்றொரு கைப்பற்றுதல் மகசர் சாட்சி தலைமை காவலர் திரு.தினேஷ் அ.சா.2 ஆகவும் மற்றும் புலன்விசாரணை அதிகாரியான பிரபாவதி, சிறப்பு உதவி ஆய்வாளர் அ.சா.3ஆக விசாரிக்கப்பட்டுள்ளார்கள். அ.சா.1 பாக்கியநாதன் மற்றும் அ.சா.2 தினேஷ் தனது நீதிமன்ற சாட்சியத்தின்போது புலன்விசாரணை அதிகாரியான அ.சா.3 சிறப்பு உதவி ஆய்வாளர் திருமதி.பிரபாவதி என்பவருடன் மது விலக்கு சம்பந்தமாக 02.00 மணிக்கு அண்ணாநகர் சோதனை சாவடியிடம் சென்றபொழுது சந்தேகத்திற்கிடமாக ஒரு நபர் பேக் வைத்துக்கொண்டிருந்தவரை சோதனை செய்தபோது இருந்த சா.பொ.1 Express Brandy – 11, Black Pearl Brandy – 3, Old Chef

Strong XXX Rum – 5, Diamond XXX Rum – 1 என மொத்தம் 20 பாட்டில்களை கைப்பற்றி அ.சா.3 தயாரித்த அ.சா.ஆ.1 கைப்பற்றுதல் மகஜர் ஆவணத்தில் சாட்சியாக இருந்து கையொப்பம் செய்ததை குறித்து, சாட்சியம் அளித்துள்ளார்கள் என்பது புலனாகிறது.

9. இவ்வழக்கில் புலன் விசாரணை அதிகாரியான அ.சா.3 பிரபாவதி, சிறப்பு உதவி ஆய்வாளர் தனது சாட்சியத்தில், கடந்த 12.08.2025ம் தேதி மதியம் 02.00 மணிக்கு தலைமை காவலர் அ.சா.1 திரு. பாக்கியநாதன் மற்றும் தலைமை காவலர் அ.சா.2 தினேஷ் என்பவருடன் மது விலக்கு வேட்டை சம்பந்தமாக அண்ணா நகர் சோதனை சாவடியிடம் சென்றபொழுது சந்தேகத்திற்கிடமாக பேக்கை வைத்துக்கொண்டு நின்றிருந்த நபரை சோதனை செய்தபோது சா.பொ.1 Express Brandy – 11, Black Pearl Brandy – 3, Old Chef Strong XXX Rum – 5, Diamond XXX Rum – 1 என மொத்தம் 20 பாட்டில்களை கைப்பற்றி அ.சா.ஆ.1 கைப்பற்றுதல் மகஜர் தயாரித்து கைப்பற்றி எதிரியை கைது செய்து அ.சா.ஆ.2 முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தி கைப்பற்றப்பட்ட பொருட்களை அ.சா.ஆ.3 படிவம் 91ன் மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பியதை குறித்தும், புலன்விசாரணையை முடித்து எதிரியின் மீது பிரிவு சட்டப்பிரிவுகள் 4(1) (C), 4(1) (A) TNP (Amendment) Act கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்ததை குறித்து சாட்சியம் அளித்துள்ளார்.

10. எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் அரசு தரப்பில் சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் வழக்கு சம்பவம் நடைபெறவில்லை எனவும், எதிரியிடம் மது பானங்கள் கைப்பற்றப்படவில்லையெனவும், இவ்வழக்கில் எதிரியை சோதனை செய்த இடமானது அண்ணா நகர் சோதனை சாவடி என்று சொல்லியுள்ள நிலையில் அதை சுற்றி நிறைய வீடுகள் மற்றும் மக்கள் நடமாட்டம் உள்ள பகுதியாக உள்ள நிலையில் தனிநபர் சாட்சியாக இவ்வழக்கில் சேர்க்கவில்லை என்றும், அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள் முன்னுக்குப்பின் முரணாக சாட்சியம் அளித்துள்ளதாலும், எதிரியின் மீது புள்ளியல் விவரங்களுக்காக ஒரு

பொய்யான குற்றத்தை சுமத்தப்பட்டு பிரிவுகள் 4(1) (C), 4(1) (A) TNP (Amendment) Act–ன்கீழான குற்றம் அரசு தரப்பில் நிரூபணம் செய்யவில்லை என வாதிட்டார்.

11. இவ்வழக்கில் விசாரிக்கப்பட்ட அரசு தரப்பில் சாட்சிகளான அ.சா.1 முதல் அ.சா.3ன் சாட்சியத்தை பரிசீலனை செய்கையில், அ.சா.1 அவரது சாட்சியத்தில் மலையிலிருந்து கீழே வருவதற்கும், மேலே செல்வதற்கும் எப்போதும் மக்கள் வந்து போய்கொண்டிருப்பார்கள் என்றும், எதிரியிடம் வழக்கு சொத்தை கைப்பற்றி காவல் நிலையம் அழைத்து வந்து வழக்கிற்கு தேவையான அனைத்து ஆவணங்களையும் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்தோம் என்றும், அ.சா.2 அவரது சாட்சியத்தில் சம்பவ இடத்தில் எதிரி எங்களை பார்த்ததும் ஓட முயற்சித்தவரை தடுத்து நிறுத்தி அவர் கையில் வைத்திருந்த பையை கைப்பற்றினோம் என்றும், எதிரி ஓடியவரை துரத்தி பிடித்த போது அங்கிருந்த நபர்கள் பார்த்தார்கள் என்றும், அ.சா.3 அவரது சாட்சியத்தில் எதிரி எங்களை கண்டதும் தப்பி ஓட முயற்சி பண்ணவில்லை என்றும், எதிரியை கைது செய்தபோது ஐந்தாறு நபர்கள் பார்த்தார்கள் என்றும் முன்னுக்குப்பின் முரணாக சாட்சியமளித்துள்ளனர். எனவே, இந்த வழக்கில் தனிப்பட்ட சாட்சிகள் யாரையும் விசாரிக்கவில்லை என்பதும், இவ்வழக்கில் மாதிரி வரைபடம், பார்வை மகசர் எதுவும் இவ்வழக்கில் தாக்கல் செய்யப்படவில்லை என்பதும், மேலும் இவ்வழக்கில் பொது மக்கள் யாரையும் பட்டியல் சாட்சியில் சேர்க்கப்படவில்லை என்பது அரசு தரப்பு வழக்கை பலவீனப்படுத்துவதாகவே உள்ளது.

மேலும், மாண்புமை உயர் நீதிமன்றம், சென்னை,

**Rathinam Vs State 2000 LW CRL (2) 575**என்ற வழக்கில்

"The next important point argued on the part of the defence is that the complainant himself cannot act as the Investigating Officer of his own case and the same cannot be done in law. This contention is supported by the judgment reported in MANU/SC/0466/1995 : AIR 1995 SC 2339 (supra) wherein it is clearly held that 'complainant should not have proceeded with the investigation of the case : that he was not only the complainant in the case, but also carried on with the investigation and examined

witnesses under Section 161 Cr.P.C. Such practice to say the least, should not resorted to so that there may not any occasion to suspect fair and impartial investigation. This telling judgment of the Apex Court leaves no room to entertain any other thought and hence this preposition of law has to be accepted in toto." என்ற வழக்கில் உள்ளது.

எனவே, இவ்வழக்கில் புகார்தாரர் வழக்கின் புலன்விசாரணை அதிகாரியாக வழக்கை புலன்விசாரணை செய்து நீதிமன்றத்தில் இறுதி அறிக்கை தாக்கல் செய்ய இயலாது என்று தெரிய வருகிறது. மேற்படி எதிரி தரப்பு வாதங்களுக்கு அரசு தரப்பில் எந்தவொரு விளக்கமும் தராதது புகார்தாரர் தரப்பு வழக்கை பாதிக்கும் விதமாகவே அமைந்துள்ளது. இந்நிலையில் விசாரணை அதிகாரியின் சாட்சியத்தை மட்டும் வைத்து எதிரிகள் மீது சாட்டப்பட்டுள்ள குற்றச்சாட்டு சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டதாக கருத இயலாது என்றும் அரசு தரப்பில் போதுமான சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் மெய்ப்பிக்கப்படவில்லை என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது. எனவே எதிரி மீது சாட்டப்பட்டுள்ள குற்றச்சாட்டான பிரிவு 4(1) (C), 4(1) (A) TNP (Amendment) Act ன் கீழ் எதிரிகள் குற்றவாளி அல்ல என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

12. **<u>முடிவாக,</u>** இவ்வழக்கில் எதிரி மீது சட்டப் பிரிவுகள் 4(1) (C), 4(1) (A) TNP (Amendment) Act – ன் கீழான குற்றத்தை பொறுத்து எதிரி குற்றவாளி இல்லை என முடிவு செய்து எதிரியை BNSS பிரிவு 271 (1)ன்படி விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.

13. இவ்வழக்கில் சி.பி. எண்.351/2025ல் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கு சொத்தான படிவம் 91ல் தாக்கல் செய்யப்பட்டுள்ள சா.பொ.1 சுமார் 180 ML அளவு கொண்ட Express Brandy – 11, 180 ML அளவு கொண்ட Black Pearl Brandy – 3, 180 ML அளவு கொண்ட Old Chef Strong XXX Rum – 5, Diamond XXX Rum – 1 மொத்தம் 20 பாட்டில்கள் மேல்முறையீட்டு காலத்திற்கு பின் அழிக்க உத்தரவிடப்படுகிறது. எதிரி எழுதி கொடுத்துள்ள பிணை பத்திரத்தை மேல்முறையீட்டு காலத்திற்கு பின் ரத்து செய்து உத்தரவிடப்படுகிறது.

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் என்னால் பிழைநீக்கம் செய்து சரிபார்க்கப்பட்டு இன்று 2025-ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 01 ஆம் நாள் இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

(ஒம்/-கா.ஸ்ரீபதி)
நீதித்துறை நடுவர்,
வாணியம்பாடி.

**அரசு தரப்பு சாட்சிகள்**

| | | |
|---|---|---|
| 1. | அ.சா.1 | திரு. பாக்கியநாதன், தலைமை காவலர் |
| 2. | அ.சா.2 | திரு. தினேஷ், தலைமை காவலர் |
| 3. | அ.சா.3 | திருமதி. பிரபாவதி, சிறப்பு உதவி ஆய்வாளர் |

**அரசு தரப்பு சான்றாவணங்கள்**

| | | |
|---|---|---|
| 1. | அ.சா.ஆ.1 | 12.08.2025ஆம் தேதியிட்ட கைப்பற்றுதல் மகசர். |
| 2. | அ.சா.ஆ.2 | 12.08.2025ஆம் தேதியிட்ட முதல் தகவல் அறிக்கை. |
| 3. | அ.சா.ஆ.3 | 12.08.2025ஆம் தேதியிட்ட படிவம் 91. |

**அரசு தரப்பு சான்று பொருள்** –

| | | |
|---|---|---|
| 1. | சா.பொ.1 | சுமார் 180 ML அளவு கொண்ட Express Brandy – 11, 180 ML அளவு கொண்ட Black Pearl Brandy – 3, 180 ML அளவு கொண்ட Old Chef Strong XXX Rum – 5, Diamond XXX Rum – 1 மொத்தம் 20 பாட்டில்கள். |

**எதிரி தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றுப் பொருட்கள்** – இல்லை.

**எதிரி தரப்பு சான்றாவணம்** – இல்லை.

**குறிப்பு**

1) எந்த சாட்சியும் 3 முறைக்குமேல் நிறுத்தி விசாரிக்கப்படவில்லை.

2) வழக்கு விசாரணையின் போது எதிரி பிணையில் இருந்தார்.

3) முடிவு காவல் துறையினருக்கு தெரிவிக்கப்பட்டது.

(ஒம்/-கா.ஸ்ரீபதி)
நீதித்துறை நடுவர்,
வாணியம்பாடி.

//உண்மை நகல்//

SRIPATHI K

JUDICIAL MAGISTRATE, VANIYAMBADI
Digitally signed by SRIPATHI K
Location: TIRUPATHUR

நீதித்துறை நடுவர்,
வாணியம்பாடி.